குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட

மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும்

தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 6

ந.க.எண். 1476 / இ1 / 2022, நாள். 18.04.2022

-----

பொருள் : குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2022 – 2023 ஆம் கல்வியாண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் 25 % இட ஒதுக்கீடு வழங்குதல் சார்பாக அறிவுரை வழங்குதல் – சார்பாக.

பார்வை :

1. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2011.
2. அரசாணை (நிலை) எண் 60, பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள் 01.04.2013.
3. அரசாணை (நிலை) எண் 66, பள்ளிக் கல்வித் (பொநு 2) துறை, நாள் 07.04.2017.
4. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண். 1476 / இ1 / 2022 நாள். 06.04.2022.

---

பார்வை (4) – ல் உள்ள இவ்வியக்கக செயல்முறைகளின் தொடர்ச்சியாக, இணையதள வழியாக விண்ணப்பங்கள் பதிவேற்றம் மற்றும் மாணாக்கர் சேர்க்கை ஆகியவற்றின் போது, கீழ்க்குறிப்பிட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றத் தெரிவிக்கப்படுகிறது.

பதிவேற்றம் செய்த விண்ணப்பங்களில் கீழ்க்காணும் சான்றிதழ்களை ஆய்வு செய்யும் அலுவலர்கள் தவறு ஏதுமின்றி கவனமுடன் செயல்பட வேண்டும்.

1(i). பிறப்புச் சான்று

பதிவேற்றம் செய்யப்பட்ட குழந்தையின் பிறப்புச் சான்றிதழை ஆய்வு செய்து, பார்வை (2) – ல் உள்ள அரசாணையின்படி கீழ்க்காணும் சான்றிதழ்களில் ஏதேனும் ஒரு சான்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

a) Birth Certificate
b) Hospital / Auxilliary and Midwife register
c) Anganwadi record
d) Declaration through an affidavit of the age of the child by the parent / Guardian

எல்.கே.ஜி வகுப்பிற்கு விண்ணப்பிக்கும் குழந்தைகள் 01.08.2018 முதல் 31.07.2019 க்குள் பிறந்திருக்க வேண்டும்.

முதல் வகுப்பிற்கு விண்ணப்பிக்கும் குழந்தைகள் 01.08.2016 முதல் 31.07.2017 க்குள் பிறந்திருக்க வேண்டும்.

1.(ii) வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கான சான்று

வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் கீழ் விண்ணப்பித்திருந்தால், அக்குழந்தை கீழ்க்குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு பிரிவினரைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். மேலும், கீழ்காணும் அட்டவணையில் உள்ளவாறு உரிய அலுவலரால் வழங்கப்பட்ட சான்றினை பதிவேற்றம் செய்திருக்க வேண்டும்.

| Name of the Community | Competent Authority |
|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் (Backward Class) | Deputy Tahsildar, Revenue Department, Government of Tamilnadu. |
| பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) (Backward Class Muslim) | |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (Most Backward Class) | |
| சீர்மரபினர் (Denotified Community) | |
| பட்டியல் வகுப்பினர் (Scheduled Community) | Tahsildar,Revenue Department,Government of Tamilnadu / Competent authority in the case of children coming from other States. |
| ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) (SCA) | |
| பழங்குடியினர் (Scheduled Tribes) | RDO / Sub Collector, Revenue Department, Government of Tamilnadu / Competent authority in the case of children coming from other States. |

1.(iii). வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்புப் பிரிவினருக்கான சான்று

வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்பு பிரிவினர் கீழ் விண்ணப்பித்திருந்தால், அக்குழந்தை கீழ்க்குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு பிரிவினரைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். மேலும், கீழ்காணும் அட்டவணையில் உள்ளவாறு உரிய அலுவலரால் வழங்கப்பட்ட சான்றினை பதிவேற்றம் செய்திருக்க வேண்டும்.

| Name of the special category | Competent Authority |
|---|---|
| ஆதரவற்றோர் (Orphan) | District Social Welfare Officer, Department of Social Welfare and Nutritious Meal programme |
| எச்ஐவி - யால் பாதிக்கப்பட்ட குழந்தை (HIV Affected Child) | Medical Officer authorized by the Department of Health and Family Welfare, Government of Tamilnadu. |
| மூன்றாம் பாலினத்தவர் ( Transgender ) | |
| துப்புரவு தொழிலாளியின் குழந்தை ( Child of Scavenger) | Competent Authority authorized by the Commissioners of the respective Corporations, Municipalities, Executive Officers of the respective Town Panchayats and Presidents' of the respective Village panchayats. |
| துப்புரவு தொழிலாளியின் குழந்தை (மாநகராட்சி, நகராட்சி, நகர்புற ஊராட்சி, கிராம ஊராட்சியில் பணிபுரியாதவர்கள்) Children of Scavengers who are not employed in Corporations, Municipalities, Town Panchayats and Village Panchayats | District Collector or the authority authorized by the District collector in this behalf. |
| மாற்றுத்திறனாளியாக இருக்கும் குழந்தை ( Differently abled Child) | District Differently abled Rehabilitation Officer |

1.(iv). நலிவடைந்த பிரிவினருக்கானச் சான்று (வருமானச் சான்று)

ஆண்டு வருமானம் இரண்டு இலட்சத்துக்கும் கீழ் பெறும் அனைத்துப் பிரிவினரும் நலிவடைந்த பிரிவினரின் கீழ் விண்ணப்பிக்கலாம். இதன் பொருட்டு பெற்றோரின் ஆண்டு வருமானச் சான்று, சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் பெற்று பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

| | |
|---|---|
| Income certificate | Tahsildar, Revenue Department, Government of Tamilnadu. |

1.(v). இருப்பிடச் சான்று

பார்வை (2) – ல் உள்ள அரசாணையின்படி, இருப்பிடத்தை நிரூபிக்கும் கீழ்க்காணும் சான்றிதழ்களில் ஏதேனும் ஒரு சான்று பதிவேற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

a) Family Card
b) Voter ID card
c) Aadhar ID card
d) Driving License
e) Bank pass Book
f) Telephone Bill
g) PAN card
h) Certificate of Residence issued by VAO
i) ID Card issued by State Government / Central Government / Public Sector Undertakings.

மேலும், விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குழந்தையின் பெற்றோர் வசிப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. ஏற்கனவே, முதன்மைக் கல்வி அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password ஐ பயன்படுத்தி EMIS Website – ல் விண்ணப்பதாரரால் பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்களை கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றிச் சரிபார்க்க வேண்டும்.

- EMIS இணையதளத்தில் CEO Log In செய்ய வேண்டும்.
- Students Menu -வில் RTE Students Verification click செய்ய வேண்டும்.
- பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள், மாணாக்கர் பெயர் மற்றும் முகவரி இணையதளத்தில் தெரியும்.
- ஒவ்வொரு ஆவணத்தையும் Click செய்து சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளின்படி உள்ளதா? என்பதை சரிபார்க்க வேண்டும்.
- Verification முடிந்தவுடன் மாணாக்கர்கள் பெயரை Click செய்து Eligible / Ineligible / Document Missing என பதிவு செய்து, அதற்குரிய Remark பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- இப்பணியினை **20.05.2022** க்குள் முடிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்களை தரம் வாரியாக (தகுதியானது/தகுதியற்றது) பிரிக்கும் பணி முடிவடைந்த பின்னர், 2022-2023 ஆம் கல்வியாண்டில் 25% ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை சார்பாக கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

- ✓ விண்ணப்பதாரரின் இருப்பிடத்திலிருந்து பள்ளி அமைவிடம் 1 கிலோ மீட்டருக்குள் உள்ள விண்ணப்பங்களை மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

- ✓ முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது மாவட்டத்தில் விண்ணப்பித்த குழந்தைகளின் விவரப் பட்டியலை 21.05.2022 பிற்பகலில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- ✓ தகுதியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை அப்பள்ளியின் 25% ஒதுக்கீட்டில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களை விட கூடுதலாக இருந்தால் குலுக்கல் முறையில் 23.05.2022 அன்று சேர்க்கைக்கான மாணாக்கர்களை தெரிவு செய்ய வேண்டும். குறைவாக இருந்தால் தகுதியான அனைத்து விண்ணப்பங்களுக்கும் சேர்க்கை வழங்க வேண்டும்.

- ✓ வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்பு பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆதரவற்றோர்/HIV ஆல் பாதிக்கப்பட்டவர்/ மூன்றாம் பாலினத்தவர்/துப்புரவு தொழிலாளியின் குழந்தை/ மாற்றுதிறனாளிகள் போன்றோரிடமிருந்து பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்களுக்கு குலுக்கல் நடத்துவதற்கு முன்னரே சேர்க்கை வழங்கிட வேண்டும்.

- ✓ நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சார்பாக பெற்றோரிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்பட்டு சேர்க்கைக்கு தகுதி பெறின் குலுக்கல் நடைபெறும் நாளுக்கு முன்னர், அதன் மீது விசாரணை செய்து தேவையான ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டால், குலுக்கலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ✓ தங்கள் மாவட்டத்தில் 25% ஒதுக்கீட்டின் கீழ் குலுக்கல் முறையில் சேர்க்கை நடைபெறவுள்ள பள்ளிகளைத் தெரிவு செய்து ஒவ்வொரு பள்ளிக்கும், வட்டாரக் கல்வி அலுவலர்/வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுனர் அல்லது முதன்மைக் கல்வி அலுவலரால் நியமிக்கப்படும் துறை பிரதிநிதி முன்னிலையில் குலுக்கல் நடைபெறுவதற்கு தக்க ஏற்பாடுகளை முதன்மைக் கல்வி அலுவலர் செய்ய வேண்டும். மேலும், அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பெற்றோர் அதிக அளவில் கூடும் இடங்களில் மாவட்டக் கல்வி அலுவலர் அல்லது வருவாய் துறை அலுவலர்கள் முன்னிலையில் குலுக்கல் நடத்திட தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- ✓ பார்வை (3) – இல் உள்ள அரசாணையின்படி, சேர்க்கைக்கான குலுக்கல் முடிந்த பிறகு, பள்ளிக்கு தகுதியுள்ள ஒரு பிரிவுக்கு ஐந்து மாணாக்கர்கள் என்ற வீதத்தில் காத்திருப்பு பட்டியலுக்கான மாணாக்கர்களையும் வரிசை எண்ணிட்டு குலுக்கலில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

- ✓ சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணாக்கர்களின் விவரத்தைப் பள்ளிக்கு வருகை புரியும் ஆய்வு அலுவலர் அன்றைய தினமே (23.05.2022) இணையதளத்தில் பதிவேற்றமும் செய்ய வேண்டும்.

- ✓ குலுக்கலின் போது ஏதேனும் அசாதாரண சூழல் ஏற்படின் ஆய்வு அலுவலர்களைக் கொண்டு உடனுக்குடன் சரிசெய்ய வேண்டும்.

மேற்படி அறிவுரைகளைப் பின்பற்றி அவரவர் மாவட்டம் சார்பாக எவ்விதப் புகாருக்கும் இடமளிக்கா வண்ணம், தேவையான அலுவலர்களை நியமித்துக் கீழ்க்கண்ட அட்டவணைப்படி, இப்பணியினை மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | நிகழ்வு | தேதி |
|---|---|---|
| 1 | சேர்க்கைக்கு இணையதள வழியாக விண்ணப்பம் செய்ய வேண்டிய நாள் | 20.04.2022 முதல் 18.05.2022 |
| 2 | தகுதியான விண்ணப்பதாரர் விவரம்/தகுதியில்லாத விண்ணப்பதாரர் விவரம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்துடன் பள்ளித் தகவல் பலகை மற்றும் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டிய நாள் | 21.05.2022 பிற்பகல் 5 மணி |
| 3 | தகுதியான விண்ணப்பங்கள் 25% ஒதுக்கீட்டில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிடக் கூடுதலாக இருந்தால் குலுக்கல் முறையில் தேர்வு செய்ய வேண்டிய நாள். | 23.05.2022 |
| 4 | குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் விவரங்கள், விண்ணப்ப எண் மற்றும் பள்ளியில் தகுதியுள்ள, ஒரு பிரிவுக்கு ஐந்து மாணாக்கர்கள் (5 seats per section) என்ற வீதத்தில் (வரிசை எண்ணிட்டு) காத்திருப்பு பட்டியலுக்கான மாணாக்கர்களின் விவரங்கள் ஆகியவற்றை பள்ளித்தகவல் பலகை மற்றும் இணையதளத்தில் வெளியிட வேண்டிய நாள்.. | 24.05.2022 |
| 5 | சேர்க்கை முடிவுற்றபின் அவ்விவரத்தினை நிர்ணயிக்கப்பட்ட படிவம்- 5 இல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு பள்ளி அளிக்க வேண்டிய நாள். | 29.05.2022 அன்று அல்லது அதற்கு முன்னர் |

குலுக்கலில் தெரிவு செய்யப்பட்ட குழந்தைகள் சேர்க்கைக்கு வரத்தவறினால் அந்தந்தக் குழந்தையின் பெற்றோருக்கு தொலைபேசி மற்றும் குறுஞ்செய்தி (SMS) வாயிலாகத் தகவல் தெரிவித்து விட்டு காத்திருப்புப் பட்டியலில் முன்னுரிமைப் படி சேர்க்கை வழங்கப்பட வேண்டும்.

- ❖ மேற்காண் பணியினை மேற்கொள்ளும் பொழுது அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் CEO login இல் EMIS இணையதளத்தில் முந்தைய ஆண்டின் நடைமுறைகளையே பின்பற்றும்படி தெரிவிக்கப்படுகிறது.
- ❖ இப்பணிசார்ந்து கடந்த ஆண்டுகளைப் போல மாவட்ட ஆட்சியரைத் தொடர்பு கொண்டு தக்க ஆலோசனையினைப் பெற்றுச் செயல்படத் தெரிவிக்கப்படுகிறது.
- ❖ மாணவர் சேர்க்கை முடிந்த பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவால் பெற்றோர்கள் அளித்த சான்றிதழ்களை ஆய்வு செய்ய வேண்டும். இதில் தவறு ஏதேனும் இருப்பின் சேர்க்கையை இரத்து செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
- ❖ ஆவணங்களை ஆய்வு செய்யும் அலுவலர்கள் தவறு ஏதுமின்றி கவனமுடன் செயல்பட வேண்டும்.

மேற்படி அறிவுரைகளைப் பின்பற்றி அவரவர் மாவட்டம் சார்பாக எவ்விதப் புகாருக்கும் இடமளிக்கா வண்ணம், தேவையான அலுவலர்களை நியமித்து இப்பணியினைச் செவ்வனே மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

18/4/2022

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

18/4/22

பெறுநர்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் (மாவட்டக் கல்வி அலுவலர்கள் மூலமாக).

நகல் :

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 09 – தகவலுக்காகப் பணிந்தனுப்பலாகிறது.
2. ஆணையர், பள்ளிக் கல்வித்துறை அவர்களுக்குப் பணிந்தனுப்பலாகிறது.
3. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 06 - அவர்களுக்குப் பணிந்தனுப்பலாகிறது.
4. தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களுக்குத் தக்க தொடர் நடவடிக்கைக்காகக் கனிவுடன் அனுப்பலாகிறது.